**எப்1/3968/2016**

**சேலம் மாநகராட்சி**

**அறிவிப்பு**

**சேலம் மாநகராட்சி தீர்மானம் எண்.259, நாள்.24.03.2017**

**திடக்கழிவு மேலாண்மை துணைவிதிகள் 2016**

சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு சட்டம் 1986 (சட்ட எண்.29/1986)ல் பிரிவு 3, 6 மற்றும் 25களில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் மத்திய அரசு திடக்கழிவு மேலாண்மை பணிகளை முறைப்படுத்த திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ஐ இயற்றியுள்ளது. இந்த திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 அனைத்து மாநகராட்சிகளுக்கும் பொருந்தும். ஒவ்வொரு மாநகராட்சியும் தனது அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் மாநகராட்சி கழிவுகளை சேகரித்தல், சேமித்தல், தரம்பிரித்தல், எடுத்துச்செல்லுதல், செயலாக்கம் மற்றும் இறுதியாக்கம் செய்தல் போன்ற பணிக்கான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ல் குறிப்பிட்டுள்ளவாறு கழிவுகளை உருவாக்குபவர் அந்தந்த மாநகராட்சி நிர்வாகத்துடன் ஒருங்கிணைந்து கழிவுகளை பொது இடங்களில் கொட்டாமல் தவிர்க்கவும், கழிவுகளை தரம்பிரித்து மாநகராட்சியால் ஏற்படுத்தப்பட்டுள்ள முறைப்படி அப்புறப்படுத்தவும் பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சேலம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் தனிநபர் குடியிருப்பு, வணிக வளாகங்கள், உணவு விடுதிகள், சிற்றுண்டி கடைகள், மருத்துவமனைகள், மொத்த வணிகர்கள், சில்லரை வணிகர்கள் மற்றும் அனைத்து வணிகர்கள் உட்பட அனைவரும் சேலம் மாநகராட்சியை தூய்மையான மாநகராட்சி பகுதியாக்க திடக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்த திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ன்படி திடக்கழிவுகளை மேலாண்மை செய்தல் முறைப்படுத்தப்பட்டு உள்ளது.

இதன்படி திடக்கழிவுகள் மேலாண்மை விதிகள் 2016ன் பிரிவு 4ன்படி கழிவை உருவாக்குபவர் அதனை குப்பையாக வெளியே போடுவதை தவிர்க்கும் பொறுப்புடையவராவர். அவர் அதிகார அமைப்பினால் அறிவிக்கப்பட்ட சேகரித்தல் மற்றும் பிரித்தல் முறைக்கு இணங்கி கழிவை ஒப்படைப்பு செய்ய உறுதி செய்ய வேண்டியவராவார்.

சேலம் மாநகராட்சி சட்டம் 1994 அத்தியாயங்கள் V,VIII,XV sections 119, 120, 226,227, 228, 229, 230, 231, 232, 233, 234, 235, 265, 430, 431, 432, 433, 434, 435, 436, 438, 439, 440ன்படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் திடக்கழிவுகளை அகற்ற போதிய ஏற்பாடுகள் செய்யவும், திடக்கழிவு சேவையில் ஈடுபட்டு பொது சுகாதாரம் பேணி சுற்றுச்சுழலை பாதுகாக்கும் செலவினத்தை அதன் பொறுப்பாளர்களிடம் இருந்து வசூலித்து செயல்படுத்தவும், நச்சுத் தன்மை உடைய கழிவுகளையோ, அழுகிய கழிவுகளையோ, மலக்கழிவுகளையோ, மருத்துவக்கழிவுகளையோ மாற்றம் செய்தல், சாலைகளில் எறிதல் மற்றும் வடிகால்களில் கொட்டுதல் ஆகியவை தடை செய்யப்படுகிறது. மீறுவோர் மீது சட்டப்படி நடவடிக்கை மற்றும் அபராதம் விதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேற்காணும் சட்ட விதிமுறைகளுக்குட்பட்டு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலைகள் சுத்தமாகவும், வடிகால்கள் தங்கு தடையின்றி செயல்படவும், நிலத்தடி நீர் மற்றும் சுற்றுப்புற காற்றின் தரம் ஆகியவை மாசுபடுவதை தவிர்க்கவும், பொது சுகாதாரம் பாதுகாக்கவும் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ன்படி மாநகர் மன்றம் ஆணையாளருக்கு திடக்கழிவு மேலாண்மை திட்ட செயல்பாட்டிற்கு தனிநபர் குடியிருப்புகள் மற்றும் வணிகர்களிடம் இருந்து திடக்கழிவு மேலாண்மை சேவைக்கட்டணம் வசூலிக்கவும் துணை விதிகளின்படி நடவடிக்கை எடுக்கவும் அதிகாரம் வழங்கியுள்ளது.

**(1) கழிவுகள் உருவாக்கும் ஒவ்வொருவரும்**

அ) உருவாகும் குப்பைகளை மக்கும் தன்மை உள்ளவை, மக்காத தன்மை உள்ளவை, அபாயகரமான வீட்டுகழிவுகள் எனத்தனிதனியே பிரித்து மக்கும் தன்மை உள்ள கழிவுகளை பச்சை நிறக்கூடையிலும் மக்காத தன்மை உள்ள மறுசுழற்சிக்கான குப்பைகளை வெள்ளை நிறக்கூடையிலும் அபாயகரமான வீட்டுக்கழிவுகளை கருப்பு நிறக்கூடையிலும் என 3 வண்ண குப்பைக்கூடைகளில் சேகரித்து மாநகராட்சியால் வழங்கப்படும் அறிவுரைகளின் படி துப்புரவுப் பணியாளர்களிடம் அல்லது திடக்கழிவுகள் சேகரிக்க வருபவர்களிடம் வழங்கப்படவேண்டும். இது குப்பைகளை உருவாக்குபவர்கள் ஒவ்வொருவரின் கடமையாகும். கூடைகள் சொந்த செலவில் வாங்கி உபயோகப்படுத்த வேண்டும்.

ஆ) சுகாதார கழிவுகளான டயப்பர், நாப்கின்கள் ஆகியவற்றினை உற்பத்தியாளர்களால் அதனுடன் வழங்கப்படுகின்ற உறையினுள்ளோ அல்லது பொருத்தமான பொருளால் சுற்றியோ உலர் கழிவுகள் அல்லது மக்காத கழிவுகள் வைக்கப்படும் கூடையில் பிரித்து வைத்து வழங்கப்படவேண்டும்.

இ) கட்டுமான மற்றும் இடிபாடு கழிவுகள் அவர்களது வளாகத்திற்குள் மட்டுமே சேகரித்து வைக்கப்படவேண்டியதுடன் கட்டுமான மற்றும் இடிபாடு கழிவு மேலாண்மை விதிகள் 2016ன் படி அகற்றப்பட வேண்டும்.

ஈ) தோட்டக்கழிவுகள், பூங்காக்கழிவுகள் ஆகியவை அவர்களது வாளாகத்திற்குள் மட்டுமே சேகரித்து வைக்கப்பட வேண்டியதுடன் மாநகராட்சியால் வழங்கப்படும் அறிவுரைப்படி அகற்றப்படவேண்டும்.

உ) தேவையற்ற கழிவுப் பொருள்களான தேங்காய் ஓடு, பயன்படுத்தாத ஆட்டுரல், உடைந்த பிளாஸ்டிக் பொருள்கள், டயர்கள் ஆகியவற்றை தனி நபர்களோ, வணிக நிறுவனமோ, தனியார் அலுவலகம் அல்லது அரசு நிறுவனம் ஆகிய எவரும் கொசுக்கள் உருவாகும் வண்ணம் வைத்திருக்கக்கூடாது.

ஊ) பொது இடங்களில் சிறுநீர் கழித்தல், திறந்தவெளியில் மலம் கழித்தல், எச்சில் துப்புதல் போன்றவை தண்டனைக்குரிய குற்றமாகும்.

(2) குப்பைகள் உருவாக்குபவர்கள் யாரும் தங்களால் உருவாக்கப்படுகின்ற குப்பைகளை தெருக்களிலோ, பொது இடங்களிலோ, நீர் நிலைகளிலோ எறிவதோ, எரிப்பதோ அல்லது புதைப்பதோ கூடாது.

(3) குப்பைகள் உருவாக்கும் அனைவரும் மாநகராட்சியால் ஏற்கனவே நிர்ணயம் செய்து சேலம் மாவட்ட அரசிதழ் சிறப்பு வெளியீடு எண்.5, நாள்.19.07.2016ன்படி சேவைக்கட்டணம் செலுத்தவேண்டும். (அட்டவணை–I)

(4) நூற்றுக்கும் மேற்பட்ட நபர்கள் கூடும் நிகழ்ச்சி மேற்கொள்ள 3 வேலை நாட்களுக்கு முன்னதாக நிகழ்ச்சி அமைப்பாளர் மாநகராட்சியில் உரிய அனுமதி பெறவேண்டும். மேலும் நிகழ்ச்சியின் போது உருவாகும் குப்பைகளை தனித்தனியே பிரித்தே சேகரித்து வைப்பதுடன், சம்பந்தப்பட்டவர்கள் தங்களது சொந்த பொறுப்பில் அகற்றிக்கொள்ள வேண்டும் அல்லது உரிய சேவைக்கட்டணம் செலுத்தினால் மாநகராட்சி தனது வாகனம் மூலம் அவற்றை அப்புறப்படுத்தும்.

..3..

(5) சாலையோர வியாபாரிகள் தங்களது வியாபாரத்தின் மூலம் உருவாகும் உணவுக்கழிவுகளான ஒருமுறை மட்டுமே பயன்படுத்தப்படும் தட்டுகள், டம்ளர்கள் தேங்காய் ஓடுகள், எஞ்சியிருக்கும் உணவு, அழுகிய காய்கறிகள், பழங்கள் போன்ற குப்பைகளை தெருக்களிலோ சாலை ஓரங்களிலோ அல்லது பொது இடங்களிலோ போடக்கூடாது. அவற்றை பிரித்து அதற்கேற்ற குப்பைதொட்டியில் சேகரித்து மாநகராட்சியால் வழங்கப்படும் அறிவுரைகளின்படி துப்புரவுப்பணியாளர்களிடம் அல்லது கழிவுகள் சேகரிக்க வருபவர்களிடம் அல்லது கழிவுப்பொருள்கள் சேகரிப்பு நிலையத்தில் வழங்க வேண்டும்.

(6) குடியிருப்போர் நல அமைப்புகள், சந்தை நலச்சங்கம் ஆகியவற்றைச் சார்ந்தவர்கள் இந்த விதிகள் அமலுக்கு வந்த ஒரு வருடத்திற்குள் மக்கும் குப்பைகளை தனியே பிரித்து தங்கள் வளாகத்திற்குள்ளேயே மாநகராட்சியின் வழிகாட்டுதலின்படி உரமாகவோ அல்லது உயிரிவாயு உற்பத்தி செய்யவோ வேண்டும். மக்காத குப்பைகளை தனியாக மாநகராட்சியால் அங்கீகரிப்பட்ட குப்பை சேகரிப்பவர்களிடமோ அல்லது மறுசுழற்சி செய்பவர்களிடமோ ஒப்படைக்கவேண்டும்.

(7) 5000 ச.மீக்குமேல் பரப்பளவு கொண்ட குடியிருப்பு வளாகங்கள் மற்றும் நிறுவனங்கள் இந்த விதிகள் வெளியிடப்பட்ட ஒரு வருடத்திற்குள் மக்காத குப்பைகளை தனியே பிரித்து தங்கள் வளாகத்திற்குள்ளேயே மாநகராட்சியின் வழிகாட்டுதலின் படி உரமாகவோ அல்லது உயிரிவாயு உற்பத்தி செய்யவோ வேண்டும். மக்காத மறுசுழற்சிக்கான குப்பைகளை தனியாக மாநகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட குப்பை சேகரிப்பவர்களிடமோ அல்லது மறுசுழற்சி செய்பவர்களிடமோ ஒப்படைக்கவேண்டும்.

(8) தினமும் 100 கிலோவிற்கு மேல் கழிவுகள் உற்பத்தி செய்யும் உணவு விடுதிகள் மற்றும் பிற நிறுவனங்கள், அலுவலகங்கள், விடுதிகள் இந்த விதிகள் வெளியிடப்பட்ட ஒரு வருடத்திற்குள் மக்காத குப்பைகளை தனியே பிரித்து தங்கள் வளாகத்திற்குள்ளேயே மாநகராட்சியின் வழிகாட்டுதலின் படி உரமாகவோ அல்லது உயிரிவாயு உற்பத்தி செய்யவோ வேண்டும். மக்காத மறுசுழற்சிக்கான குப்பைகளை தனியாக மாநகராட்சியால் அங்கீகரிப்பட்ட குப்பை சேகரிப்பவர்களிடமோ அல்லது மறுசுழற்சி செய்பவர்களிடமோ ஒப்படைக்கவேண்டும்.

(9) அனைத்து வகையிலான கழிவுபொருள்களையும் பேப்பர், தண்ணீர் பாட்டில்கள், மது பாட்டில்கள், குளிர்பான பாட்டில்கள், அழுகிய காய்கறிகள், பழங்கள், டம்ளர்கள் போன்றவற்றினை தெருக்களிலோ, பொது இடங்களிலோ, நீர் நிலைகளிலோ எறிவதோ, எரிப்பதோ அல்லது புதைப்பதோ கூடாது. தனித்தனியே விதிகளில் குறிப்பிட்டுள்ள வண்ண குப்பைக்கூடைகளில் சேகரித்து மாநகராட்சியால் வழங்கப்படும் அறிவுரைகளின்படி துப்புரவுப்பணியாளர்களிடம் அல்லது கழிவுகள் சேகரிக்க வருபவர்களிடம் வழங்கப்படவேண்டும்.

(10) வளர்ப்புப் பறவை, மீன், இறைச்சிக்கொட்டில் கழிவு (நியமிக்கப்பட்ட இறைச்சிக் கொட்டில் சந்தைகள்தவிர்த்து மற்ற எல்லா பகுதியிலிருந்தும்)

மாநகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட இறைச்சிக் கொட்டில்களும் சந்தைகளும் தவிர வணிகச் செயல்பாடுகள் விளைவாக வளர்ப்புப்பறவை, மீன், இறைச்சிக் கொட்டில் கழிவுகள் ஏற்படுத்தும் வளாகங்களின் உரிமையாளர் கழிவுகளை தனித்தனியாக மூடியநிலையில் சுகாதார தன்மையுடன் சேகரித்து நாள்தோறும் குறிப்பிட்ட நேரத்தில் இதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள சேலம் மாநகராட்சியின் பெறுதல் வாகனத்தில் ஒப்படைக்க வேண்டும். இவ்வகைக் கழிவுகளைச் சமுதாய கழிவுத் தொட்டியில் கொட்ட தடை உள்ளது. மீறினால் அபராத அட்டவணையில் குறிப்பிட்டவாறு அபராதம் செலுத்த வேண்டி வரும்.

**(11) விற்பனையாளர்/கூவி விற்போர் :**

விற்பனையாளர்/ கூவி விற்போர் அனைவரும் தங்கள் விற்பனை செயல்பாடுகளால் கழிவுகள் ஏதாவது உருவாக்கினால் மக்கும் மற்றும் பிற கழிவுகளை ஒன்று சேர்க்காமல் போட கொள்கலன் / தொட்டியை விற்பனை செய்யும் இடத்தில் வைக்க வேண்டும். கழிவுகளைச் சரியாகப் பிரித்து கொள்கலன் பொருந்திய கைவண்டியில் அல்லது அருகிலுள்ள சமூகக் கழிவு சேகரிப்புத் தொட்டியில் ஒப்படைக்க வேண்டியது கழிவு உருவாக்குவோர் / விற்பனையாளர் பொறுப்பு ஆகும். இவ்வாறு செய்யவிலை என்றால் அபராத அட்டவணையின்படி அபராதம் கட்ட வேண்டி வரும். விற்பனையாளர் / கூவிவிற்போர் அனைவரும் தங்கள் இடத்தைச் சுற்றியுள்ள பகுதியைத் தூய்மையாக வைக்க வேண்டியது அவர்களது பொறுப்பு ஆகும்.

**(12) வீட்டு கழிவுநீர் வடிகால்:–**

உரிமையாளர் / தங்கியிருப்போர் தன் / தம் வளாகங்களின் வீட்டு கழிவுநீர் வடிகாலில் கழிவுகளை எதுவும் கொட்டாமல் பார்த்துக் கொள்ள வேண்டியதும், குப்பையைப் பிரித்து சேலம் மாநகராட்சி அல்லது முகமையால் அளிக்கப்படும் கழிவு சேகரிக்கும் வாகனத்தில் ஒப்படைப்பதும் தங்கள் பொறுப்பாகும். இவ்வாறு செய்ய தவறுவது அபராத அட்டவணைப்படி அபராதம் கட்ட வேண்டி வரும்.

**(13) சொந்த/ செல்ல விலங்கால் ஏற்படும் கழிவுகள்:**

தெருவில் அல்லது பொது இடங்களில் வளர்ப்பு விலங்குகளை சாலையில் திரியவிடக்கூடாது. மேலும் தெருவில் அல்லது பொது இடங்களில் வளர்ப்பு விலங்கால் ஏற்படும் கழிவை வழித்தெடுத்தல் / தூய்மையாக்கல் உரிமையாளரின் பொறுப்பு ஆகும். இவ்வகைக் கழிவைச் சரியாக அப்புறப்படுத்த வில்லையெனில் அபராத அட்டவணைப்படி அபராதம் கட்ட வேண்டி வரும்.

**(14) இந்தத் துணை விதிகளை மீறினால் செலுத்தும் அபராதம்**

இந்தத் துணை விதிகள் தொடங்கிய நாளும் அதற்குப் பின்பும் பழக்கப்படும் / எச்சரிக்கைக் காலம் 90 நாட்கள் உண்டு. அதற்குப் பிறகு இந்தத் துணைவிதிகளை மீறுதல் இருந்தால் அபராத அட்டவணை (அட்டவணை–4) படி இந்தத் துணைவிதி மீறும் நிகழ்வு ஒவ்வொன்றுக்கும் அபராதத் தொகை செலுத்த வேண்டும். கழிவு உருவாக்குபவர் இந்தத் துணைவிதிகள் ஏதாவது ஒன்றை மீறுவதாக கண்டால் அடுத்த முறை அபராதத் தொகை இரட்டிப்பாகும்.

துணை விதிகளை மீறும் யாராவது ஒருவர் அல்லது மாசுப்படுத்துபவர் அட்டவணை–4ல் குறிப்பிட்டுள்ளபடி அபராதத்தொகை கட்ட இயலவில்லை என்றால் அவர்களுக்கு எதிராக நகரக் காவல் சட்டம் மற்றும் மாவட்டக் காவல் சட்டம்/ இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்படி வழக்கு தொடரப்படும்.

**(15) தண்டனை**

துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளை மீறுபவர் அல்லது துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளை மீறும் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குப் பாதுகாவலராக இருப்போர் நடைமுறையில் உள்ள சட்டத்தின்அடிப்படையில் தண்டனைக்கு உரியவர் எனக் கருதப்படுகின்றனர்.

**(16) மேல்முறையீடு செய்வதற்கான தகுதி**

எந்த ஒரு தனி நபர் சேலம் மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை துணைவிதிகள் 2016ன் கீழ் பாதிப்பு ஏற்பட்டதாக கருதினால் அவர் மாநகராட்சியின் ஆணையர் அவர்களுக்கு இதுகுறித்து மேல்முறையீடு செய்தால் மாநகராட்சி மாமன்றம் இதுகுறித்து முடிவு செய்யும்.

..5..

**<u>அட்டவணை–1</u>**

**<u>திடக்கழிவு மேலாண்மை துணைவிதிகள் 2016</u>**

**<u>திடக்கழிவு உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு சேவைக்கட்டணம் விவரம்</u>**

**<u>தீர்மானம் எண்.331,நாள்.29.02.2016</u>**

| வ.எண் | திடக்கழிவுகள் உற்பத்தி செய்யும் வணி நிறுவனங்கள் | ஏற்னவே உள்ள கட்டணம் | புதியதாக நிர்ணயம் செய்ய வேண்டியது | தினசரி கட்டணம் |
|---|---|---|---|---|
| | **திருமண மண்டபங்கள்1 (விழாவிற்கு)** | | | |
| 1. | திருமண மண்டபங்கள் விழாவின்போது 500 கிலோ திடக்கழிவு உற்பத்தியாகும் நிகழ்வுகளுக்கு (1விழாவிற்கு) | ரூ.250.00 | ரூ.750.00 | ஒரு நிகழ்ச்சிக்கு |
| 2. | திருமண மண்டபங்கள் விழாவின்போது 1000 கிலோ திடக்கழிவு உற்பத்தியாகும் நிகழ்வுகளுக்கு(1 விழாவிற்கு) | ரூ.500.00 | ரூ.1500.00 | ஒரு நிகழ்ச்சிக்கு |
| | **மருத்துவமனைகள் (மாதம் ஒன்றிற்கு) (மருத்துவ கழிவுகள் ஏதுவும் குப்பைகளில் சேர்த்து கொட்டக்கூடாது)** | | | |
| 3. | மருத்துவமனைகள் 1–10 படுக்கை கொண்டது (தினசரி 25 கிலோ வரை) | – | ரூ.1250.00 | மாதம் ஒன்றிற்கு |
| 4 | மருத்துவமனைகள் 11–50 படுக்கை கொண்டது (தினசரி 50 கிலோ வரை) | – | ரூ.2000.00 | மாதம் ஒன்றிற்கு |
| 5 | மருத்துவமனைகள் 51–100 படுக்கை கொண்டது (தினசரி 100 கிலோ) | – | ரூ.5000.00 | மாதம் ஒன்றிற்கு |
| 6 | மருத்துவமனைகள் 101–200 படுக்கை கொண்டது தினசரி 100 கிலோவிற்கு மேல் | – | ரூ.1000.00 | மாதம் ஒன்றிற்கு |
| 7 | மருந்து கடைகள் (Medicals) | – | ரூ.100.00 | மாதம் ஒன்றிற்கு |
| 8 | தனியார் சமுதாய கூடங்கள் (விழா ஒன்றிற்கு) 250 கிலோ வரை | – | ரூ.250.00 | ஒரு நிகழ்ச்சிக்கு |
| | **ஷாப்பிங் மால்கள்(மாதம் ஒன்றுக்கு)** | | | |
| 9 | பெரியது | – | ரூ.2500.00 | |
| 10 | நடுத்தரம் | – | ரூ.1500.00 | |
| 11 | சிறியது | – | ரூ. 500.00 | |
| | **பழச்சாறு கடைகள் மற்றும் பழமுதிர் சோலைகள்** | | | |
| 12 | பெரியது தினசரி 100 கிலோ | – | ரூ.2500.00 | மாதம் ஒன்றிற்கு |
| 13 | சிறியது தினசரி 25 கிலோ | – | ரூ. 500.00 | மாதம் ஒன்றிற்கு |
| | **<u>உணவகங்கள்</u>** | | | |
| 14 | தினசரி 200 கிலோ திடக்கழிவு உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் | – | ரூ.5000.00 | மாதம் ஒன்றிற்கு |
| 15 | தினசரி 100 கிலோ திடக்கழிவு உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் | – | ரூ.3000.00 | மாதம் ஒன்றிற்கு |
| 16 | டிபன் சென்டர் தினசரி 25 கிலோ | – | ரூ.750.00 | மாதம் ஒன்றிற்கு |
| 17 | காபி பார் தினசரி 10 கிலோ | – | ரூ.300.00 | மாதம் ஒன்றிற்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | **தங்கும் விடுதிகள்** | | | |
| 18 | 25 அறைக்கு கீழ் உள்ளவை தினசரி 25 கிலோ | – | ரூ.500.00 | மாதம் ஒன்றிற்கு |
| 19 | 26–50 அறைகள் உள்ளவைதினசரி 50 கிலோ | – | ரூ.1000.00 | மாதம் ஒன்றிற்கு |
| 20 | 51–100 அறைகள் உள்ளவை தினசரி 100 கிலோ | – | ரூ.2500.00 | மாதம் ஒன்றிற்கு |
| 21 | 101–க்கு மேல் ஒவ்வொரு 25க்கும் கூடுதலாக ரூ. 500/– (ரூ.2000+ 500) | – | ரூ.2000+ 500 | மாதம் ஒன்றிற்கு |
| 22 | ரெக்ஷின் கடைகள் (லெதர் பேக்,சோபா தயாரிப்பு போன்றவை) தினசரி 10 கிலோ | – | ரூ.250.00 | மாதம் ஒன்றிற்கு |
| 23 | எலக்ட்ரானிக்/மின்சாதன பொருட்கள் பொருட்கள் விற்பனை செய்பவை10 கிலோ | – | ரூ. 250.00 | மாதம் ஒன்றிற்கு |
| 24 | தையற் கடைகள் 5–10 மிஷின் வைத்துள்ளவர்கள் | – | ரூ.100.00 | மாதம் ஒன்றிற்கு |
| 25 | தையற் கடைகள் 10–க்கு மேல் மிஷின் வைத்துள்ளவர்கள் தினசரி 15 கிலோ | – | ரூ.250.00 | மாதம் ஒன்றிற்கு |
| | **பழ மண்டிகள்** | | | |
| 26 | மொத்த விற்பனை தினசரி 50 கிலோ | – | ரூ.2500.00 | மாதம் ஒன்றிற்கு |
| 27 | சில்லரை விற்பனை தினசரி 10 கிலோ | – | ரூ.250.00 | மாதம் ஒன்றிற்கு |
| 28 | டாஸ்மார்க் பார்கள் தினசரி 25 கிலோ | – | ரூ.1000.00 | மாதம் ஒன்றிற்கு |
| 29 | இறைச்சி கடைகள் பெரியது தினசரி 10 கிலோ | – | ரூ. 100.00 | மாதம் ஒன்றிற்கு |
| 30 | இறைச்சி கடைகள் சிறியது தினசரி 5 கிலோ | – | ரூ. 50.00 | மாதம் ஒன்றிற்கு |
| 31 | அச்சகங்கள் மற்றும் பிளக்ஸ் போர்டு தயாரிப்பாளர்கள் பெரியது தினசரி 10 கிலோ | – | ரூ.500.00 | மாதம் ஒன்றிற்கு |
| 32 | அச்சகங்கள் மற்றும் பிளக்ஸ் போர்டு தயாரிப்பாளர்கள் சிறியது தினசரி 5 கிலோ | – | ரூ.250.00 | மாதம் ஒன்றிற்கு |
| 33 | ஜவுளி கடைகள் பெரியது தினசரி 10 கிலோ | – | ரூ.500.00 | மாதம் ஒன்றிற்கு |
| 34 | ஜவுளி கடைகள் சிறியது பெரியது தினசரி 5 கிலோ | – | ரூ.250.00 | மாதம் ஒன்றிற்கு |
| 35 | மேற்கண்ட வணிக நிறுவனங்கள் நீங்கலாக இதர இனங்களில் திடக்கழிவு தினசரி 25 Kg வரை | – | ரூ.1000.00 | மாதம் ஒன்றிற்கு |
| 36 | மேற்கண்ட வணிக நிறுவனங்கள் நீங்கலாக இதர இனங்களில் திடக்கழிவு தினசரி 50 Kg- வரை | – | ரூ.1500.00 | மாதம் ஒன்றிற்கு |
| 37 | மேற்கண்ட வணிக நிறுவனங்கள் நீங்கலாக இதர இனங்களில் திடக்கழிவு 100 Kg வரை | – | ரூ. 2000.00 | மாதம் ஒன்றிற்கு |
| 38 | திரையரங்குகள் | – | ரூ.1000.00 | மாதம் ஒன்றிற்கு |
| 39 | அரசு போக்கு வரத்து கழக பணிமனைகள் | – | ரூ.5000.00 | மாதம் ஒன்றிற்கு |
| 40 | தனியார் பேருந்து / கார் பட்டறைகள் | – | ரூ.500.00 | மாதம் ஒன்றிற்கு |
| 41 | அழகு நிலையம் /சலூன் | – | ரூ.50.00 | மாதம் ஒன்றிற்கு |

**திடக்கழிவு மேலாண்மை துணைவிதிகள் 2016**
**அட்டவணை–1ல் திருத்தப்பட்ட மற்றும் புதிய இனங்களுக்கான சேவைக்கட்டணம் விவரம்**
**சேலம் மாநகராட்சி தீர்மானம் எண்.259, நாள்.24.03.2017**

திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ன்படி திடக்கழிவுகளை அகற்ற சேவைக்கட்டணம் நிர்ணயம் செய்து 2016–2017 ஆண்டிற்கு தற்போது வசூலிக்கப்பட்டு வருகிறது. கீழே குறிப்பிடப்பட்டுள்ள இனங்களில் சேவைக்கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்ட தொகை கூடுதலாக உள்ளதாலும், சில இனங்களில் வகையாக பிரித்து நிர்ணயம் செய்யப்படாத காரணத்தாலும் திடக்கழிவுகளை உற்பத்தி செய்யும் மளிகை கடைகள், ஜெராக்ஸ் கடைகள், போன்ற இனங்களுக்கு புதியதாக சேவைக்கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| **வ.எண்** | **சேலம் மாவட்ட அரசிதழ் சிறப்பு வெளியீடு எண்.5, நாள்.19.07.2016ல் வெளியிடப்பட்ட இனங்களின் வரிசை எண்** | **திடக்கழிவு உற்பத்தி செய்யும் நிறுவனம்** | **ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்ட தெகை** | **புதியதாக நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் மற்றும் திருத்த விவரம்** |
|---|---|---|---|---|
| 1 | 33 | ஜவுளி கடை தினசரி 10 கிலோ | ரூ500 | 10 கிலோ என்பது 20 கிலோ |
| 2 | 34 | ஜவுளி கடை சிறியது தினசரி 5 கிலோ | ரூ250 | 5 கிலோ என்பது 10 கிலோ |
| 3 | 40 | தனியார் பேருந்து / கார் பட்டறை | ரூ500 | ரூ100 மாதம் ஒன்றுக்கு |
| 4 | 6 | மருத்துவமனை 101–200 படுக்கைகள் கொண்டது தினசரி 100 கிலோவிற்கு மேல் | ரூ.1000 என தவறுதலாக அச்சில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ரூ10000 மாதம் ஒன்றுக்கு என பதிவு செய்தல். | |
| 5 | 9 | **ஷாப்பிங் மால்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது** | **ஷாப்பிங்மால்கள் / சூப்பர் மார்க்கெட்டுகள்/ சுயசேவை பிரிவுள்ள வணிக நிறுவனங்கள் என திருத்தம் செய்தல்.** | |

| **புதியதாக நிர்ணயம் செய்யப்பட்ட இனங்கள்** | | | | |
|---|---|---|---|---|
| **வரிசை எண்** | **சேலம் மாவட்ட அரசிதழ் சிறப்பு வெளியீடு எண்.5, நாள்.19.07.2016ல் வெளியிடப்பட்ட இனங்களின் வரிசை எண்** | **திடக்கழிவு உற்பத்தி செய்யும் நிறுவனம்** | **ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்ட தெகை** | **புதியதாக நிர்ணயம் செய்யப்படும் கட்டணம்** |
| 1 | – | பழச்சாறு கடைகள் மற்றும் பழமுதிர்சோலைகள் தினசரி 25 கிலோவிற்கு கீழ் திடக்கழிவு உற்பத்தி | – | ரூ.300 மாதம் ஒன்றுக்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | – | பிஸ்கட்,ரொட்டிகள் மற்றும் பலகாரங்கள் போன்ற விற்பனைகளுக்கு | – | ரூ.150 மாதம் ஒன்றுக்கு |
| 3 | – | காபி பார் பெரியது – பேக்கரியுடன் உள்ளது. | – | ரூ.300 மாதம் ஒன்றுக்கு |
| 4 | – | காபி பார் சிறியது | – | ரூ.100 மாதம் ஒன்றுக்கு |
| 5 | – | பேக்கரி தயாரிப்புகள் பிஸ்கட், ரொட்டிகள் போன்றவை (பெரியது) | – | ரூ.1000 மாதம் ஒன்றுக்கு |
| 6 | – | ஜவுளிக்கடை தினசரி 5 கிலோ அளவு | – | ரூ.100 மாதம் ஒன்றுக்கு |
| 7 | – | பேக்கரி தயாரிப்புகள் பிஸ்கட், ரொட்டிகள் போன்றவை (நடுத்தரம்) | – | ரூ.500 மாதம் ஒன்றுக்கு |
| 8 | – | பேக்கரி தயாரிப்புகள் பிஸ்கட், ரொட்டிகள் போன்றவை (சிறியது) | – | ரூ.250 மாதம் ஒன்றுக்கு |
| 9 | – | டிபன் சென்டர் (நடுத்தரம்) | – | ரூ.500 மாதம் ஒன்றுக்கு |
| 10 | – | டிபன் சென்டர் (சிறியது) | – | ரூ.200 மாதம் ஒன்றுக்கு |
| 11 | – | மளிகை கடை பெரியது | – | ரூ.200 மாதம் ஒன்றுக்கு |
| 12 | – | மளிகை கடை சிறியது | – | ரூ.100 மாதம் ஒன்றுக்கு |
| 13 | – | வாழை இலை கடை | – | ரூ.200 மாதம் ஒன்றுக்கு |
| 14 | – | பொங்கல், ஆயுதப்பூஜை போன்ற விழாக்காலங்களின் போது வாழைமரம், கரும்பு போன்றவற்றை சாலையோரம் விற்பனை செய்பவர்களுக்கு | – | ரூ.100 நிகழ்வு ஒன்றுக்கு |
| 15 | – | தீபாவளி பண்டிகையின் போது தற்காலிக பட்டாசு விற்பனை செய்யும் கடை | – | ரூ.500/– 7 நாட்களுக்கு |
| 16 | – | திருமண மண்டபங்களில் நடைபெறும் பட்டாசு கடைகளுக்கு | – | 7 நாட்களுக்கு ரூ.3500/– |
| 17 | – | திறந்தவெளி இடங்களில் கண்காட்சி நடத்த | – | நாள் ஒன்றுக்கு ரூ.2000/– |
| 18 | – | திருமண மண்டபங்களில் கண்காட்சி நடத்த | – | நாள் ஒன்றுக்கு ரூ.1000/– |

| | | | | |
|---|---|---|---|---|
| 19 | – | ஏற்கனவே மன்றத்தீர்மானம் எண்.183, நாள்.30.12.2016ன்படி அடுக்குமாடி குடியிருப்புக்கு மட்டும் ஒவ்வொரு வீட்டிற்கும் சேவைக்கட்டணம் நிர்ணயிக்கப்பட்டத் தொகை | ரூபாய்.10 | ரூபாய்.15/– |
| 20 | – | தனி குடியிருப்பு ஒன்றுக்கு நிர்ணயிக்கப்படவேண்டிய தொகை | – | ரூபாய்.10/– |
| 21 | – | தினசரி 5 கிலோவுக்கும் குறைவாக திடக்கழிவுகளை உற்பத்தி செய்யும் அனைத்து வணிக நிறுவனங்களுக்கும் | – | மாதம் ஒன்றுக்கு ரூ.50/– |

## அட்டவணை–II

### மக்கும் திடக்கழிவுகள் மற்றும் மறுசுழற்சிக்கான கழிவுகள் பற்றிய விளக்கம்

<u>மக்கும் கழிவுகள்</u>

" **மக்கும் கழிவுகள்** " – பொதுவாக மாநகராட்சி கழிவுகளில் காணப்படும். இவற்றினை ஈர கழிவுகள் என்றும் அழைக்கப்படுகிறது. மக்கும் கழிவுகள் என்பது தாவரங்கள் அல்லது விலங்குகள் மூலம் உருவாகும் கழிவுகள், இவையாவும் மற்ற நுண்உயிரினங்கள் மூலம் மக்கும் தன்மையுடையவை.

1. சமையல் அறையில் உருவாகும் கழிவுகள் டீதூள், முட்டை ஓடுகள், பழங்கள் மற்றும் காய்கறிகளில் பயன்படுத்தப்பட்ட பகுதி தவிர மீதம் உள்ளவை.
2. இறைச்சி மற்றும் எலும்புகள்.
3. தோட்டங்களில் உள்ள உதிர்ந்த இலைகள் மற்றும் பூக்கள்.
4. விலங்குகளின் கழிவுகள்.
5. பயன்படுத்தப்பட்ட காகிதம்.
6. தேங்காய் ஓடுகள்.
7. சாம்பல்.

<u>மறு சுழற்சிக்கான கழிவுகள்.</u>

" மறு சுழற்சிக்கான கழிவுகள் " – பொதுவாக மாநகராட்சி கழிவுகளில் காணப்படும். இதனை உலர்ந்த கழிவுகள் என்றும் அழைக்கப்படும். இவற்றினை மூலப்பொருளாக கொண்டு புதிய பொருட்களை உருவாக்கலாம். இவை பழைய பொருட்களின் தன்மையுடனோ அல்லது புதியதாகவோ காணப்படும்.

1. பேப்பர்கள்
2. புத்தகங்கள், பயன்படுத்தப்பட்ட காகிதம்.
3. கண்ணாடி.
4. உலோகப்பொருட்கள் அல்லது கம்பிகள்.
5. பிளாஸ்டிக்.
6. தோல் பொருட்கள்.
7. ரெக்சின் பொருட்கள்.
8. ரப்பர் பொருட்கள்.
9. மரச்சாமான்கள்
10. சிப்பம் கட்டும் உறைகள்.

## அட்டவணை–III

## வீடுகளில் உருவாகும் அபாயகரமான கழிவுகள்

1. காலியான வாசனைத்தெளிப்பான் கலன்கள்.
2. பயன்படுத்தப்பட்ட பேட்டரிகள் மற்றும் மின்னணு பேட்டரிகள்.
3. தரை, கழிவறைகள் மற்றும் கழிவுநீர் வாய்க்கால்களை சுத்தம் செய்யப்பயன்படுத்தப்பட்டு காலியான ஆசிட் போன்ற பாட்டில்கள்.
4. கார் பேட்டரிகள், எண்ணெய் வடிகட்டிகள் மற்றும் காருக்கு பயன்படுத்தப்பட்ட பாகங்கள்.
5. இராசயன பாட்டில்கள்.
6. பயன்படுத்தப்பட்ட அழகு சாதன பொருட்கள்.
7. பழுதான டியூப் லைட், சி.எப்.எல். விளக்குகள் போன்றவை.
8. பயன்படுத்தப்பட்ட மருந்துகள் மற்றும் குப்பிகள்.
9. பெயிண்ட் டப்பாக்கள், கிரீஸ் டப்பாக்கள், கையுறைகள், சுவற்றினை சுத்தம் செய்யப் பயன்படுத்தப்படும் பொருட்களின் காலி குப்பிகள்.
10. இரசாயனத்தால் உருவாக்கப்பட்ட பஞ்சு (Foam).
11. மெர்க்குரி உள்ள பொருட்கள்.
12. வீட்டில் பயன்படுத்தப்பட்டு பிறரால் எதற்கும் பயன்படாத தொலைகாட்சி, கம்ப்யூட்டர், டிவிடி பிளேயர், டிஜிட்டல் காமராக்கள், கால்குலேட்டர்கள் போன்றவை.

## அட்டவணை–4

## அபராதத்தொகை விவர பட்டியல்

| வ. எண் | உட்பிரிவுகள் / துணை விதிகளின் விளக்கம் | சட்டத்தை மீறினால் செலுத்த வேண்டிய அபராதத்தொகை ரூ. |
|---|---|---|
| 1. | பொது இடத்தில் / தனியார் சொந்தமான இடத்தில் / வண்டியிலிருந்து திடக்கழிவுகளை எறிதல். | 50.00 |
| | கடைகள்/வணிக நிறுவனங்களில் பொது இடத்தில் மற்றும் தனியார் சொந்தமான இடத்தில் திடக்கழிவுகளை எறிதல் | 200.00 |
| 2. | **<u>பிரிக்காததும் குறிப்பிடப்பட்ட தனித்தனியான தொட்டியில் ஒருங்கு சேர்க்காததும்</u>** | |
| | அ) தனி குடியிருப்பு | 50.00 |
| | ஆ) அடுக்குமாடி குடியிருப்பு | 200.00 |
| | இ) பெருமளவு திடக்கழிவு உருவாக்குபவர் | 500.00 |
| 3. | கட்டுமானம் இடித்தலில் உருவாகும் கழிவைக் குறிப்பிட்டவகையில் பிரிக்காமல் ஒப்படைத்தல் | 1000.00 |
| 4. | தோட்டக்கழிவை, மரக்கழிவை பொது இடத்தில் சீர்படுத்தாமல் எறிதல் | 200.00 |
| 5. | குப்பை தொட்டிக்கு வெளியே அல்லது ஒதுக்கப்படாத பகுதியில் திடக்கழிவை கொட்டுதல் / திறந்த வெளியில் / சாக்கடையில் /ஓடையில் / நீர்நிலைகளில் திடக்கழிவுகளை எறிதல் | 100.00 |

.11..

| | | |
|---|---|---|
| **6.** | **திடக்கழிவை எரித்தல்** | |
| | அ) தனியாள் தனது வளாகத்திற்கு உள் | **50.00** |
| | ஆ) தனியாள் பொது இடத்தில் | **100.00** |
| | இ) வணிக நிறுவனங்களில் சேகரமாகும் கழிவுகளை எரித்தல் | **500.00** |
| **7.** | மீன், வளர்ப்புப் பறவை, இறைச்சி ஆகியவற்றின் கழிவை(வீட்டில் உருவானது அல்லாதது) குறிப்பிட்ட வகையில் பிரித்து ஒருங்கு சேர்த்தல் செய்யாமல் ஒப்படைத்தல் | **100.00** |
| **8.** | அ) கொள்கலம் / திடக்கழிவுக்கூடை இல்லாத விற்பனையாளர்க்கு / கூவி விற்பவர்க்கு | **50.00** |
| **9.** | ஆ) குறிப்பிட்ட வகையில் திடக்கழிவைப் பிரிக்காமல் ஒப்படைக்கும் விற்பனையாளர்க்கு / கூவி விற்பவர்க்கு | **100.00** |
| **10.** | பொதுக்கூட்டம் / பொது நிகழ்ச்சிக்குப்பின் கூட்டம் நடைபெற்ற இடத்தை 24 மணி நேரத்திற்குள் தூய்மைப்படுத்தவில்லையெனில் வைப்புத்தொகையிலிருந்து அபராதத்தொகை பிடித்தம் செய்யப்படும். | **தூய்மைப்படுத்த வில்லையெனில் அபராதமாக வைப்புத் தொகையிலிருந்து ரூ.1000.00 பிடித்தம் செய்யப்படும்.** |

**ஆணையாளர்**
**சேலம் மாநகராட்சி.**